
மின்னிதழ்

# தேசியம்

THESIYAM தේසියම්

www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 71 | 31.05.2023 (புதன்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## போர்புரிந்த இராணுவ வீரர்களை வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள்

### அரச பயங்கரவாதிகளாக கருதுகின்றனர் : மனோ எம்.பி



மரணித்தவர்களை நினைவு கூறுவதற்காக பொது நினைவு தூபி அமைக்கும் எண்ணப்பாடு அடிப்படையிலே சரியான ஒன்று என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள தமிழ் மக்களிற்கு பொது நினைவு தூபி அமைத்தல் தொடர்பாக

பக்கம் 5

## இனப்பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காகவே பொது நினைவுத் தூபி!

### மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்தும் எனவும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த மாட்டாது எனவும்

## சிவாஜிலிங்கம் ஆதங்கம்..!



பக்கம் 5

# இனி எங்களால் போராட முடியுமா?

## என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது..!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்..!



இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார். வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்கம் 5

## கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் : ஒரே இடத்தில் அஞ்சலிப்பதா? : சி.வி.கே!



கொன்றவர்களுக்கும் கொன்று குவிக்கப்பட்டவர்களுக்கும் ஒரே இடத்தில் அஞ்சலி செய்வது என்பது மக்களை தவறாக வழி நடத்துகின்ற அர்த்தமானதன்று என வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

பொது நினைவு தூபி அமைப்பது குறித்த முடிவு குறித்து சி . வி. கே. சிவஞானம் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சரவையின் இந்த தீர்மானமே ஒரு தெளிவில்லாத தீர்மானம். யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினர் ,

பக்கம் 5

## பொது நினைவுத் தூபி!

### தமிழர்களின் போராட்டத்தினை கேவலப்படுத்துவது போன்றது..!

## சுரேஷ் காட்டம்..!



விடுதலை போராட்டத்தில் கொல்லப்பட்டவர்களை, கொன்றவர்களையும் ஒன்றாக இணைத்து நினைவு தூபி அமைப்பது என்பது தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தினை கேவலப்படுத்துவது போன்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5



பக்கம் 5

## யாழில் காணி பிடிக்கும் செய்தி உண்மையல்ல: அமைச்சர் டக்ளஸ்

யாழ். மாவட்டத்தில் 2000 ஏக்கர் காணிகள் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமானது என்று வர்த்தமானி அறிவிப்பு வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் சில ஊடகங்களில் வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ் மாவட்டத்தில் காணிகளை வனவளப் பாதுகாப்பு திணைக்களம் போன்ற எந்தவிதமான அரச

## பட்டச் சான்றிதழ்களை வழங்குவதற்கு இழுத்தடிப்பு : யாழ் பல்கலைகழக பட்டதாரிகள் திண்டாட்டம்!



பக்கம் 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா முடிந்து பல மாதங்களாகியும் பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ்களை வழங்குவதற்கு வெளிவாரிக் கற்கைகள் பிரிவு இழுத்தடித்து வருவதாகப் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

2021 ஆண்டு வரை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் வழங்கப்பட்ட வியாபார முகாமைத்துவமாணி, வணிகமாணி, கலைமாணிப் பட்டதாரிகளே பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்படாமையினால் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி உள்ளனர்.

இவர்களுக்கு உரிய காலத்தில் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்படாமை குறித்துத் தாம் கடிதம் மூலம் துணைவேந்தருக்குத்

## இலங்கையில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் கருவி..! சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள விமர்சனம்!

AMNESTY INTERNATIONAL

பக்கம் 5

இலங்கையில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் கருவியாக, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், சிறுபான்மையினரின்

# கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்..!



கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார்.

பேருந்து நிலைய வளாகத்தில் ஏற்கனவே வியாபார நிலையங்களை வைத்திருந்தவர்களுக்கு மீண்டும் அதே இடத்தில் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்ததுடன் அவர்களின் மேலதிக கோரிக்கைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சுதமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய திருவிழாவில் சிக்கல்..!

## போராட்டத்தில் குதித்த மக்கள்..!



சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் 7ஆம் திருவிழாவை சுதுமலை தெற்கு பகுதி மக்களிடம் வழங்குமாறு கோரி நேற்றையதினம்(30) போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. யுகசக்தி சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பித்த குறித்த போராட்டம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் வரை பேரணியாக சென்றது. அதன் பின்னர் ஆலயத்தின் தலைவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஏழாம் திருவிழாவை எம் மக்களுக்கு கொடு, இது தனி குடும்பத்தின் திருவிழா அல்ல ஊர் மக்களின் திருவிழா, திருவிழாவை பறித்து எம் மக்களை ஏமாற்றாதே, ஆலய நிர்வாகமே நீதியான பதில் சொல், கிராமம் ஒன்றுபட எமது திருவிழா எமக்கு வேணும்" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், பண்டையகாலம் தொட்டு ஏழாம் திருவிழாவானது சுதுமலை தெற்கு பகுதி மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திருவிழாவிற்கான நிதியை எமது பகுதி மக்கள் திரட்டி, எமது திருவிழா தலைவரான கந்தையா என்பவரிடம் கொடுப்போம். அவர் அந்த நிதியை ஆலய திருவிழாவிற்கு செலவு செய்வார். திருவிழாவை அனைவரும் சேர்ந்து செய்வோம். அவர் கடந்த 1994ஆம் ஆண்டு உயிரிழந்து விட்டார். அதன் பின்னர் அவரது பெண் பிள்ளைகள் வழியில் வந்தவர்கள் எங்களை திருவிழா செய்ய விடாமல், இது தங்களது திருவிழா என்று கூறுகின்றார்கள்.

இந்த பிரச்சினை பொலிஸ் நிலையம், மானிப்பாய் பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்கள் இந்த பிரச்சினையை விசாரித்துவிட்டு, திருவிழாவை பொதுவாக செய்யுமாறு கூறினர். ஆலய நிர்வாகத்தினரும், திருவிழாவை அனைவரும் சேர்ந்து செய்யுமாறு தான் கூறுகின்றனர். இந்த பிரச்சினையை 1994ஆம் ஆண்டு தமிழ் அமைப்பின் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றவேளை, திருவிழாவினை பொதுவாக செய்யுமாறு அவர்களும் தீர்ப்பளித்தனர்.

கடந்த 23ஆம் திகதி, யுகசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் உட்பட ஐவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் குறித்த தரப்பினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருவிழாவிற்கு இடைக்கால தடை விதிக்குமாறு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே எமது இந்த பிரச்சினைக்கு சரியான தீர்வு கிடைத்து, நாங்கள் அனைவரும் சேர்ந்து இந்த திருவிழாவினை நடாத்த வேண்டும் - என்றனர்.

# வட - கிழக்கில் தலைவிரித்தாடும் பௌத்த மேலாதிக்கம் : அரசியல் உரிமைச் சட்டம் பாயாதது ஏன்...!



ஒரு நகைச்சுவை கலைஞரை சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைச் சட்டத்தின் கீழ் கைது செய்யும் அரசாங்கம் வடக்கு கிழக்கில் பௌத்த ஆக்கிரமிப்புக்களை செய்வோருக்கு எதிராக இச்சட்டத்தைப் பயன்படுத்தாதது ஏன்? என்ற கேள்வியை பிரபல சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அருளிங்கம் சுவஸ்திக்கா எழுப்பியுள்ளார்.

காலி முகத்திடலில் போராட்டகாரர்களால் கொழும்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், "அண்மையில் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்ச்சியில் பௌத்த மதத்திற்கு எதிராக சில சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டு எதிர்வரும் 07ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களை அவமதித்து, இழிவுபடுத்தி பார்வையாளர்களை சிரிக்க வைத்தார்.

பௌத்த பாடசாலைகள் குறித்தும் அவர் பொதுவெளியில் கடுமையாக விமர்சித்தார்." என இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான குடியுரிமை அமைப்பு காவல்துறை தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்ததற்கு அமைய குறித்த யுவதி கைது செய்யப்பட்டார்.

மேலும், இவர் அரசியல் உரிமை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இச்சட்டம் தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் பல சிறுபாண்மை இனத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், எந்தவொரு அரசாங்கமும் மக்களை பாதுகாப்பதற்காக ICCPR சட்ட த்தின் 3ஆவது பிரிவை பயன்படுத்தியதில்லை.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் நடைபெறும் இந்து, இஸ்லாமியர்களுக்கு எதிரான பௌத்த ஆக்கிரமிப்புக்களை செய்பவர்கள் எவரும் இச்சட்டத்தின் கீழ் இதுவரையில் கைது செய்யப்பட்டதில்லை.

அதுபோன்று, திகன கலவரத்திற்கு காரணமான நபரைக் கூட இச்சட்டத்தில் கைது செய்யவில்லை.

இன, மதங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தவே அரசாங்கம் முயல்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் குரல் கொடுப்பதை திசைத் திருப்ப ICCPR சட்டத்தை பயன்படுத்துகின்றனர்" என்றார்.

# மட்டக்களப்பு நகர் வடிகானில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு அபாயம் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

# பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிப்பு !!



மட்டக்களப்பு நகரில் குடிமனைகளை ஊடறுத்துச் செல்லும் வடிகான்களில் காடு வளர்ந்து கழுவு நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவே வீடுகளில் தேங்காய் சுரறட்டை மற்றும் ரின்களை தேடுவதை சுகாதார அதிகாரிகள் விட்டுவிட்டு இந்த வடிகானில் நீர் தேங்கி நிற்பது தொடர்பாக மாநகர சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு நகரில் ஆசிரியர் கலாச்சாலைக்கு அருகில் இருந்து ஆரம்பிக்கும் இந்த பெரிய வடிகான் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிமனைகளை ஊடறுத்து பொற் தொழிலாளர் வீதி ஊடாக கல்லடி வாவியை சென்றடையும் சுமார் ஒரு கிலோமீற்றருக்க அதிகமான தூரத்தை கொண்ட இந்த வடிகாணில் மரங்கள் காடுகள் போல வளர்ந்துள்ளதுடன் கழிவு பொருட்களால் குவிந்துள்ளதால் கழிவு நீர் வழிந்தேட முடியாமல் தேங்கி நிற்கின்றது

இதனால் டெங்கு நுளம்பு மற்றும் விச பாம்புகள் விச பூச்சிகள் வடிகானுக்கு அருகிலுள்ள வீடுகளுக்குள் உள் நுழைவதும் டெங்கு ஏற்பட கூடிய நிலையும் துர்நாற்றம் வீசிவருகின்றது இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவாதாக கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் டெங்கு நுளம்பை ஒழிப்பதாக பொது சுகாதார அதிகாரிகள் வீடுகளில் தேங்காய் சுரறட்டை மற்றும் ரின்களை கண்டால் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்கின்ற நீங்கள் இந்த வடிகானில் டெங்கு நுளம்பு வளர்க்கும் மாநகர சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பார்களா? வழக்கு தொடர்வார்களா? பொது மக்களுக்கு ஒரு சட்டம் அரச திணைக்களத்திற்கு ஒரு சட்டமா?

நகரிலுள்ள அனைத்து வடிகான்களை முதலில் சுத்தம் செய்ய வேண்டியது சுகாதார மற்றும் மாநகரசபையின் கடமையாகும் எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா? டெங்கு நுளம்பை ஒழிப்பார்களா? என பொதுமக்கள் வினா எழுப்புகின்றனர் .

# ஒரு நூலை பிடித்து கயிராக்கும் வேலையே

## இந்தியாவுடனான பேச்சு வார்த்தை..! சி.வி.கே.சிவஞானம் கருத்து..!

இந்தியா பேச்சுவார்த்தைக்கு கூப்பிடுவது என்பது ஊடகங்களின் ஊகம் எனவும் இது வரைக்கும் அது குறித்த உத்தியோகபூர்வ அழைப்புகள் இருப்பதாக தெரியவில்லை எனவும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் புதுடில்லி பயணம் குறித்து ஊடகத்திற்கு இவ்வாறு பதிலளித்துள்ளார். தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில், யாரும் கதைக்கும் சில்லறை கதைகளை கேட்ட பின்னர் இவ்வாறான தகவல்களை ஊடகங்களே பரப்புவதாகவும் கூறியுள்ளார்.

அது மட்டுமன்றி கூட்டமைப்பு என்று கூறும் பொழுதே முந்திய கூட்டமைப்போ அல்லது இன்றைய கூட்டமைப்போ என்ற பிரச்சினையும் உள்ளது. அது வேறு பிரச்சினை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தையில் சந்தித்து பேசலாம் என்று கதைப்பார்கள். கதைத்திருக்கலாம். ஆயினும் இவ்வாறான பேச்சுவார்த்தை குறித்து உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் போன்று ஒரு நூலை பிடித்து கயிராக்கும் வேலைகளை ஊடகங்கள் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் 05 மாணவர் கற்கை வள நிலையங்கள் திறந்து வைப்பு!






அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், சம்மாந்துறை, இறக்காமம், நாவிதன்வெளி மற்றும் உகன ஆகிய ஐந்து பிரதேசங்களில் தலா 5 பாடசாலைகளில் மாணவர் கற்கை வள நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

SWOAD நிறுவனத்தினால் GCERF மற்றும் கெல்விற்றாஸ் நிறுவனங்களின் நிதி உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற EMPOWER செயற்திட்டத்தின் கீழ் வன்முறை தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்கள் மீளெழும் திறனை கட்டியெழுப்பும் நோக்கில் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது. இங்கு கணினி, பிறின்ரர், தளபாடங்கள், நவீன மாணவர் கதிரைகள், புத்தகங்கள், அலுமாரி முதலான பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுவாட் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் க.பிறேமலதனின் வழிகாட்டலில் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட கோரக்களப்பு சக்தி வித்தியாலயத்தில் மாணவர்கள் கற்கை வள நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது பாடசாலை அதிபர் வி.விமலேஸ்வரன் தலைமையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக கெல்விற்றாஸ் நிறுவனத்தின் EMPOWER செயற்திட்டத்திற்கு கிழக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற ரி.ரமேஸ், மற்றும் கெல்விற்றாஸ் EMPOWER செயற்திட்டத்திற்கு நிதி உத்தியோகத்தர் சசிகலா, திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன், பிரதி கல்விப்பணிப்பாளர். ரி.கங்காதரன், கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.ரவீந்திரன், பிரதி அதிபர் தி.தியாகராஜா, சுவாட் நிறுவனத்தின் தலைவி. திருமதி கஜேந்தினி சுவெந்திரன், சுவாட் நிறுவனத்தின் திட்ட கள உத்தியோகத்தர்களான எஸ். ஆனந்தராசா, செல்வி. தீச்சிக்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மற்றும் திட்டத்தில் இணைந்து கொண்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதேபோல் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திலும் மாணவர் கற்றல் வள நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

# யாழில் கடன் தொல்லையால் உயிர் மாய்த்த நபர்...!

## வீட்டுக்கு வெளியில் காத்திருந்த கடன்காரர்கள்..!

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் கடன் தொல்லையால் சிறு வர்த்தகர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார். நேற்று முன்தினம் நவிண்டில் பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

மரக்காலை நடத்தி வரும் ஒருவரே தனது வீட்டில் உயிரை மாய்துள்ளார். அவர் உயிரை மாய்த்த சமயத்தில் அவரை தேடி வீட்டிற்கு வெளியில் கடன் கொடுத்தவர்கள் சிலர் காத்து நின்றதாகவும், வர்த்தகர் உயிரை மாய்த்ததையறிந்து வீட்டிலிருந்து அழுகுரல்கள் கேட்டதையடுத்து கடன் கொடுத்தவர்கள் நழுவிச் சென்றதாகவும் அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர்.
கடந்த சில நாட்களின் முன்னரும் கடன்கொடுத்தவர்கள் மரக்காலைக்கு சென்று தலைக்கவசத்தால் வர்த்தகரை தாக்கியுள்ளனர்.

கடன் தொல்லையால் வர்த்தகர் ஏற்கெனவே ஒருமுறை தனது மரக்காலைக்குள் உயிரை மாய்க்க முயன்றபோது, மரக்காலையில் பணியாற்றியவர்கள் தலையிட்டு அவரை சமரசம் செய்து வீட்டுக்கு அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.











# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை.

முன்னணி நிறுவனமான Sri Lanka Association for Software Services Companies - SLASSCOM இன் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை நேற்று நடைபெற்றது.

தொழில் வழிகாட்டல் பிரிவு பணிப்பாளர் பேராசிரியர். அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் அதியாகவும், SLASSCOM நிறுவன தலைவர் ஆஷிக் அலி சிறப்பு பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

அங்குராப்பண நிகழ்வு, தொழில் வழிகாட்டல் நிகழ்வு மற்றும் தொழிற் சந்தை என மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இத்தொழிற்சந்தையில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கலை கலாசாரம், வர்த்தக முகாமைத்துவம், விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் திருகோணமலை வளாகத்தின் பிரயோக விஞ்ஞானம், தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்விப் பீடங்களைச் சேர்ந்த இளம் பட்டதாரிகள் அத்துடன் பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

அங்குராப்பண மற்றும் தொழில் வழிகாட்டல் அமர்வுகள் காலை நேர நிகழ்வாக கலை கலாசார பீட கேட்போர் கூடத்திலும் தொழிற்சந்தை மாலை நேர நிகழ்வாக நல்லையா கேட்போர் கூடத்திலும் இடம்பெற்றது.

இதன்போது பிரதி உபவேந்தர் பேராசிரியர். கருணாகரன், வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி கலாநிதி. ஜெயராஜா, தொழிநுட்ப பீட பீடாதிபதி கலாநிதி. மதிவேந்தன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி. குணபால சிங்கம், பதிவாளர் பகிரதன் மற்றும் பல் கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவு பணிப்பாளர் மற்றும் அதன் விரிவுரையாளர்கள் அத்துடன் பீடங்களின் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் ஆரம்பித்து வைத்த தொழிற்சந்தையில், இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. இக்கூடங்களில் மாணவர்களுக்கான உடனடி நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் இளம் பட்டதாரிகள் பயிலுனர்களாக இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டதுடன், பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

மேலும், இளம் பட்டதாரிகள் பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்திசெய்து கொண்டதோடு எவ்வாறு தொழில் உலகிற்கு பிரவேசிப்பது என்பது தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்கியதுடன், இளம் பட்டாதரிகள் மற்றும் பட்டதாரிகளின் சுயவிபர தரவுகள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான தொழில்வாய்ப்பு தளங்கள் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.





**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
**021 222 7557 / +94 76 567 3339**

**தேசியம் பத்திரிகையில் கதைகள் பேசும் பக்கத்திற்கு சிறந்த புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகிறது... நீங்கள் எடுத்த சிறந்த படங்களை எங்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் பெயருடன் அனுப்பி வையுங்கள்..**
**+94 76 567 3339**

# முஸ்லிங்களின் பிரச்சினைகள் மற்றும் கல்முனை விவகாரம் தொடர்பில் கல்முனையில் கூட்டம் !



இலங்கை முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிலும் குறிப்பாக கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை மக்களுக்கு முன்வைத்தலுக்காகவும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்று கல்முனை உரிமைக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சமாதான கற்கைகளுக்கான நிறுவன பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல்.றியாஸ் தலைமையில் நேற்று முன்தினம் (29) இரவு கல்முனை தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள கல்முனை விவகாரத்தில் இடையீட்டு மனுதாரர்களாக தாங்கள் செல்லவேண்டிய அவசியம் குறித்தும், அந்த வழக்கில் முஸ்லிங்களுக்கு இருந்த ஆபத்து தொடர்பிலும் மக்களுக்கு விளக்கமளித்தனர்.

கல்முனை முஹைத்தீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ், அரசியல்துறை பேராசிரியரும், தென் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சாரபீடாதிபதியான எம்.எம்.பாஸீல் ஆகியோர் முஸ்லிங்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பிலும், கல்முனை விவகாரம் தொடர்பிலும் முஸ்லிங்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும், அரசியல்வாதிகளும், சிவில் அமைப்புக்களும் முன்னெடுக்கவேண்டிய பணிகள் தொடர்பிலும் பேசினர். இந்த கலந்துரையாடலில் உலமாக்கள், தென் கிழக்கு பல்கலைக்கழக பல்கலைக்கழக சீரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.எம் இர்சாத், வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர் இஸட். ஏ. அஸ்மீர், சட்டமாணவன் எம்.வை. எம்.வை. இம்ரான், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஏ.ஜே ஜெளஸி, முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், வர்த்தகர்கள், சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள், என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் போது முஸ்லிம் சமூகத்தின் கடந்த கால வரலாறுகள் மீட்கப்பட்டதுடன், எதிர்கால விடயங்கள் தொடர்பிலும் பேசப்பட்டது.

# குரவை ஒலி விண்ணைப்பிளக்க அம்மனின் குளிர்த்திச்சடங்கு கல்யாண கால் நடப்பட்டது!



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு நேற்று முன்தினம்(29) திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக ஆலயத்தில் தர்மகத்தாக்கள், கப்புகனார்கள் நிருவாகிகள் சேர்ந்து விசேட பூஜை வழிபாடு இடம் பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறை மேளம் அடித்து கடற்கரைக்கு சென்று அங்கு விசேட பூஜை இடம் பெற்று கடல்தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையிலே குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் சிறப்பாக நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சாறிகளை அம்மனின் கல்யாண காலுக்கு சாத்தி வழிபட்டார்கள். மேலும் பலகாரங்கள் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து வழிபட்டார்கள்.

ஆலய தர்மகத்தாக்களான பரமலிங்கம் இராஜமோகன், இரா.குணசிங்கம், சா. கங்காதரன் தலைமையில் இம்முதல் நாள் சடங்கு சிறப்பாக நடைபெற்றது.

**சடங்கு விபரம்.**

நேற்று ஆரம்பமாகி இச்சடங்கு தொடர்ந்து 08தினங்கள் நடைபெற்று ஜூன் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக் காவியம் பாடலும் இடம்பெறும். தொடர்ந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக் கிழமை வரை தொடர்ந்து பகல் 1 மணிக்கு பூசையும் மாலை 7மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

05ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள்(6) செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம்சடங்கு 12ஆம் திகதி மாலை 7 மணிக்கு இடம்பெறும்.




## திராய்க்கேணி பாடசாலை மாணவர்களுக்கு

# இணைந்த கரங்களினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு.



இணைந்த கரங்கள் அமைப்பினால், கமு/திகோ/திராய்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கும் நிகழ்வு நேற்று ஆசிரியர் ஏ.எல்.பத்திமா சிபா தலைமையில் இடம் பெற்றது.

திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகஸ்ட தொழில் வாய்ப்பற்று வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் கமு/திகோ/திராய்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் (40) மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்களான கே. விஜிதரன், திருமதி. ந. பவாணி ஆகியோரும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ.கஜரூபன், எஸ். காந்தன், சி.துலக்சன், என்.லிரோஸ்காந், கே.ஜெயந்தன், எஸ்.சிருஸ்காந், டீ. தஜன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர்.

# கல்முனையில் சுற்றாடல் வார வேலைத் திட்டம் ஆரம்பம்

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த மர நடுகை நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (30) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்றுது.

இதன்போது கல்முனை மாநகர சபையின் பிரதான அலுவலக வளாகத்திலும் சிறுவர் பூங்காக்களிலும் மரங்கள் நடப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றாட வாரத்தில் ஒவ்வொரு நாளும் முறையே மர நடுகை தினம், வளி மாசடைதல் தாக்கங்களை குறைக்கும் தினம், சுற்றாடல் சுத்தப்படுத்துகை தினம், உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தினம், நீர் மூலாதாரங்களை பாதுகாக்கும் தினம், பேண்தகு காணி முகாமைத்துவ தினம், பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ தினம் மற்றும் சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்டம் என நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கல்முனையிலும் இந்நிகழ்வுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மாகாண முதலமைச்சின் செயலாளரது சுற்று நிருபத்திற்கமைவாக உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.



## இனப்பிரச்சினைகளை மூடி...

பொது நினைவு தூபி என்பது மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்தும் எனவும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த மாட்டாது எனவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தேசியம் ஊடகத்திற்கு தொலைபேசி மூலம் வழங்கிய ஒலிப்பதிவிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள தமிழ் மக்களிற்கு பொது நினைவு தூபி அமைத்தல் தொடர்பாக அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக உங்கள் கருத்து யாது? என எமது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு, அவர் பதிலளிக்கையில்,

பொது நினைவு தூபி என்பது மாறுபட்ட பிரச்சினைகளை உடையவர்களிற்கு தீர்வாக செய்வது. மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்துமே தவிர அது நிச்சயமாக நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கோ அல்லது வேறு ஒரு விடயத்திற்கோ உதவமாட்டாது.

மேலும், நினைவு தூபியில் பெரும்பாலான சிங்களவர்களும், படை வீரர்களுமே அஞ்சலி செலுத்த முடியும். மாறாக போரிலே பாதிக்கப்பட்ட எமது மக்களிற்காக அஞ்சலி செலுத்த முற்படின் முள்ளிவாய்க்கால் விடயங்களையே நினைவுபடுத்தும்.

இவ்வாறாக பொது நினைவு தூபி என்பது இன பிரச்சினையை மூடி மறைப்பதற்காக அமைக்கப்படும் ஒன்றாகவே இதனைபார்க்க முடியும். மாறாக தமிழ் மக்கள் வேறு எந்த வழியிலும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

## போர்புரிந்த இராணுவ வீரர்...

அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக அவர் பதிலளிக்கையில்,

மரணித்தவர்களை நினைவு கூறுவதற்காக பொது தூபி அமைக்கும் எண்ணப்பாடு அடிப்படையிலே சரியான ஒன்றே. ஆனால் இலங்கை வரலாற்றில் கொல்லப்பட்டவர்களுக்கும், கொன்றவர்களும் வெவ்வேறாக அடையாளம் காணப்படுகின்றது.

அதனுள்ளும் கொல்லப்பட்ட போராளிகளை தமிழர்கள் விடுதலை வீரர்களாகவும் அரசாங்கத்தையும் பிக்குக்களையும் பயங்கரவாதிகளாவும் மற்றும் போர்புரிந்த இராணுவ வீரர்களை வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் அரச பயங்கரவாதிகளாகவும் கருதுகின்றனர்.

இரண்டு தரப்பினதும் போரிற்கு மத்தியிலே வன்முறை நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட பொதுமக்கள் நாடு முழுவதுமுள்ளனர். அத்துடன், தீராத இனப்பிரச்சினை காரணமாக இனக்கலவரங்களால் கொல்லப்பட்ட மக்களும் கணிசமாக உள்ளனர்.

1958 ,1961, 1962 , 1977 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பாரிய இனக்கலவரம் காரணமாக தென் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மலையகத்திலும் தென் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் மற்றும் கொழும்பிலும் கூட கொல்லப்பட்டனர். அத்துடன் இந்தக்கலவரத்தில் கொல்லப்பட்ட முஸ்லீம் மக்களும் இருக்கின்றனர்.ஆகவே அதில் இலங்கையினை சேர்ந்த அனைத்து இனத்தவரும், மதத்தவரும் அத்துடன் மொழியினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி இலங்கையர் அல்லாத வெளிநாட்டு பிரஜைகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்த பின்னணியை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இவற்றினை நினைவு கூறுதல் தொடர்பான செயற்பாட்டு சிந்தனையினை ஆரம்பிக்க வேண்டும். பொதுவாக அனைவருக்குமான நினைவு தூபியினை நிர்மாணித்து அதனை மரணித்தவர்களிற்காக அனைவரும் நினைவு கூறும் ஒன்றாக கருதும் நிலையில் நாடு இல்லை. அதனை முற்போக்காக நான் கருதுகின்றேன். அது முழுமையானதல்ல.

கொல்லப்பட்டவர்களில் அப்பாவி மக்கள், போராளிகள் மற்றும் இராணுவ வீரர்கள் என பலர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரிற்கும் ஒவ்வொரு காரணங்களால் மரணம் ஏற்பட்டுள்ளது. போராளிகளும் இராணுவ வீரர்களும் போர் செய்வதற்கும் வீர மரணம் அடைவதற்கும் என்றுமே போராடினார்கள்.

ஆனால் அப்பாவி பொதுமக்கள் அவற்றிற்கிடையில் சிக்கி கொல்லப்பட்டனர். இவ்வாறாக மரணங்களில் வேறு வேறு காரணங்கள் இருப்பினும் அவர்கள் அடிப்படையில் மரணித்துள்ளனர். இவற்றினை மனதிலே கொண்டு பரந்த சிந்தனையுடன் முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

## இனி எங்களால் போராட முடியு...

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் முப்பதாம் திகதி சர்வதேச நீதியை கோரி கவன ஈர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

உறவுகளை கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு, சரணடைந்து, கையில் ஒப்படைக்கப்பட்ட, எமது உறவுகளை தேடித்தான் நாம் ஜனநாயக போராட்டத்தை அகிம்சை வழியில் 14 வருடங்களாக தொடர்ச்சியாக வீதியில் நின்று போராடி கொண்டிருக்கின்றோம்.

புதிய அரசாங்கமானது, பயங்கரவாத தடை சட்டத்தை எடுப்பதாக கூறி, புதிதாக பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தை அமுல்படுத்த நினைக்கின்றார்கள். ஆனால் அதை செய்கின்ற போது எமது ஜனநாயக போராட்டத்திற்கான கருத்து சுதந்திரமோ, தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து போராடுவதற்கு பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமானது ஒரு படிக்கல்லாக அமையும் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், ஏனையவர்களிடமும் நிறைவேற்றாது நிறுத்த வேண்டும் என்பதனை ஊடக வாயிலாக கேட்டு கொள்கின்றோம்.

இலங்கை தேசத்து மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்ற போதும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கும் எந்த ஒரு நீதியும் வழங்காமல் இந்த சர்வதேசம் பார்த்து கொண்டிருக்கின்றது. அதேபோன்று கடத்தி காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற உறவுகளை தேடி நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்ற போது இலங்கை தேசத்தை ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்கள்.

உறவுகள் இனியாவது மனிதர்களாக வாழ வேண்டும். ஏனையவர்களுடன் வாழ்வதற்கு உதவ வேண்டும் என்பதற்காக நடக்க இருக்கின்ற கூட்ட தொடரிலாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றங்கள் இழைத்தவர்களை பாரப்படுத்தி மக்களுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை நாம் மிகவும் பணிவாக கேட்டு நிற்கின்றோம்.

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது. ஏனென்றால் அச்சுறுத்தல்கள், தடை உத்தரவுகள் இருந்தன. தற்போது நீதிமன்ற வழக்குகள் கூட எமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. எனவே தொடர்ச்சியாக போராட சர்வதேசம் உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன் என தெரிவித்தார்.

## கொன்றவர்களையும் கொல்ல...

போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் ஒரே கூடைக்குள் போட்டு நினைவிடம் எங்கே அமைப்பது? மக்களையும் போராளிகளையும் இலங்கை ராணுவத்தினர் கொலை செய்தனர். கொலை செய்தவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் ஒரே இடத்தில் அஞ்சலிப்பது என்பது மக்களை தவறாக வழிநடத்துகின்ற அர்த்தம் இல்லாத செயல்பாடே தவிர யதார்த்தமானது அல்ல.

அஞ்சலி செலுத்தும் போது மக்கள் தமது மதம் சார்ந்தே அஞ்சலி செலுத்துவார்கள். ஆனால் மத நல்லிணக்கம் என்ற பெயரில் பொது தூபி அமைத்து அந்த இடத்தில எந்த மதம் சார்ந்து அஞ்சலி செலுத்துவது என்ற கேள்வியையும் முன்வைத்துள்ளார். இந்த முடிவை சரத் வீரசேகர எதிர்த்துள்ள நிலையில் சிங்கள இனமும் ஏற்றுகொள்ளவில்லை என்பதே நிதர்சனம் எனவும் தெரிவித்ததுள்ளார்.

ஒற்றுமைக்கும் இனநல்லிணக்கத்திற்கும் பல விடயங்கள் உண்டு என்று தெரிவித்த அவர், தமிழன் என்று தம்மை அடையாளபடுத்தி கொண்டு செய்கின்ற குரோத நடவடிக்கைகளை நிறுத்துவது தான் இனநல்லிணக்கம் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் மத நல்லிணக்கத்தை உருவாக்காது என்றும் தமிழர்களுடைய உரிமைகளை பறிக்காமல் உரிமைகளை கொடுத்து நல்லிணக்கம் செய்யுமாறும் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை வெற்றி விழாவாக கொண்டாடுபவர்களும் அந்த துக்கத்தை அனுபவிக்கும் நாங்களும் ஒரே இடத்தில சங்கமிப்பது என்பது சாத்தியம் இல்லாத ஒன்று என்றும் சிவிகே. சிவஞானம் தெரிவித்துள்ளார்

## பொது நினைவு தூபி! தமிழர்...

பொது தூபி அமைப்பது தொடர்பில் நேற்றைய தினம் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில், அண்மையில் ஜனாதிபதி யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூறும் முகமாக ஒரு தூபியினை கட்டுவதாகவும், அதற்காக முடிவெடுத்துள்ளார் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

அதையடுத்து தமிழ், சிங்கள சமூகங்களிற்கிடையே இது பற்றிய பேச்சுக்கள் எழுந்தன. தமிழர்களை பொறுத்த வரை விடுதலைக்காக போராடிய இனமே எம் இனம். அவ்வாறான போராட்டத்திற்கு அடக்கு முறையும், ஆட்சியாளர்களும் மூலகாரணம்.

அதிகளவான பொதுமக்கள், போராளிகள் என்று பலர் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர். இவை அனைத்தும் விடுதலைக்காக போராடிய ஒரே ஒரு காரணத்தாலே இடம்பெற்றது.

இவ்வாறாக கொல்லப்பட்டவர்களை, சுட்டு கொன்றவர்களையும் ஒன்றாக இணைத்து பொது தூபி என்ற பெயரினையும் வைத்து அதனை நாம் கொண்டாடுவோம் என்று கருதுவது எமது விடுதலை போராட்டத்தினை கேவலப்படுத்த கூடிய ஒரு செயற்பாடே. அதனால், இவ்வாறான பொது ஏற்பாடு என்பது தேவையற்றது.

ஆனாலும் யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களிற்காக பொது விழாக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை அவர்கள் தொடர்ந்தும் செய்யலாம்.

அதே போன்று யுத்தத்தில் கொல்லப்பட்ட உறவுகள், போராளிகள் மற்றும் தமிழ் மக்களிற்காக அஞ்சலி செலுத்த வேண்டியது தமிழர்களின் கடமையும் தேவையுமாக காணப்படுகின்றது. அதனால் அதற்கான ஏற்பாடுகளை தமிழ் மக்கள் முன்னெடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

சிங்களவர்களை பொறுத்த மட்டில் இது பயங்கரவாதிகளின் போராட்டமாக இருக்கலாம் ஆனால் எம்மை பொறுத்த மட்டில் இது விடுதலை போராட்டம்.

இவ்வாறாக எமது மக்களையும் போராளிகளையும் நாம் கௌரவப்படுத்துவதை தடை செய்ய கூடாது. அதற்கான உரிமை சர்வதேச ரீதியில் அவர்களிற்கு கிடையாது.

அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்வதுடன், லட்சகணக்கான எமது மக்களை கொன்று குவித்து விட்டு அதற்காக ஆதங்கப்பட்டு ஒன்றாக இணைத்து தூபி கட்டுவது என்பது தேவையில்லாத வேலை. மாறாக யுத்தத்தில் கொல்லப்பட்ட உறவுகளிற்காகவும், போராளிகளிற்காகவும் தூபி கட்டுவதற்கு தமிழ் மக்களிற்கு வழி விடுங்கள்.

அதை விடுத்து இணைத்து தூபி கட்ட நடவடிக்கை எடுத்தால் அதனை தமிழ் மக்கள் ஏற்றக்கொள்ள மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

## பட்டச் சான்றிதழ்களை வழங்கு...

தெரியப் படுத்தியதன் காரணமாகவே தமது பட்டச் சான்றிதழ்கள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றன என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்துக்கு அருகில் அமைந்துள்ள திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்துக்கு நேரில் சென்று தமது பட்டச் சான்றிதழ்களை வழங்குமாறு கேட்ட போது, துணைவேந்தரிடம் முறையிட்டது போல துணைவேந்தரிடமே போய் பட்டச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அங்குள்ள அதிகாரிகள் தம்மைத் திட்டுவதாகவும், அச்சிடுவதற்கு வசதிகள் இல்லை, மட்டை வரவில்லை என சாக்குப்போக்கு கூறி சான்றிதழ் வழங்குவதை இழுத்தடிக்கின்றனர் எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

## யாழில் காணி பிடிக்கும் செய்தி...

திணைக்களங்களுக்கும் கொடுப்பதற்கான தீர்மானங்கள் எவையும் தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 1985 ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்களின் குடியிருப்புக்களாகவும் விவசாய நிலங்களாகவும் இருந்த அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் கருத்து சுதந்தி...

கருத்துச் சுதந்திரத்தின் நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு வழிவகுக்காத வகையில், வெறுப்புணர்வை வலியுறுத்துவதை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாக கொண்ட அனைத்து சட்டங்கள், கொள்கைகள், கடுமையான முறையில் பயன்படுத்தப்படுவதை இலங்கை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம், இந்த சர்வதேச சட்டத்தை, உள்நாட்டில் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாக மன்னிப்புசபை குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் உடன்படிக்கையை அங்கீகரித்த பின்னர் இலங்கை கடைப்பிடிக்க உறுதியளித்த கடமைகளை உள்நாட்டு சட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்காகவே குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

எனினும் முரண்பாடாக, இலங்கை அதிகாரிகள் சிறுபான்மையினரை குறிவைக்கும் அடக்குமுறை கருவியாக இதனை பயன்படுத்துவதாக மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

# கல்முனையிலிருந்து தேசிய, மாகாண மட்டங்களில் சாதித்தவர்களை கௌரவித்த "வர்ண இரவு"



கல்முனை வலயப் பாடசாலைகளிலிருந்து தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத்துறையில் சாதித்த வீரர்களை பாராட்டி கௌரவிக்கும் "வர்ண இரவு" நிகழ்வு வரலாற்றில் முதன்முறையாக நிந்தவூர் அல்- அஸ்ரக் தேசிய பாடசாலை காஸிமி மண்டபத்தில் கல்முனை கல்வி வலய உடற்கல்விக்கு பொறுப்பான உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை கௌரவித்தார். இந்நிகழ்வில் மேலும் கல்முனை கல்வி மாவட்ட பொறியலாளர் ஏ.எம். ஸாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்களான எம்.எச். ஜாபீர், எம்.எச். றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப், என். வரணியா, ஏ.எச்.பௌஸ், உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம்.ஏ. மலிக், உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், உதவிக்கல்வி பணிப்பாளர் ஏ. அஸ்மா மலிக், என். சஞ்சீவன், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிபுதீன் உட்பட வலயக்கல்வி அலுவலக அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத்துறையில் சாதித்த கல்முனை வலய பாடசாலைகளின் 300க்கும் மேற்பட்ட வீரர்களை பாராட்டி கௌரவித்த "வர்ண இரவு" நிகழ்வில் சாதனைக்கு துணையாக நின்றவர்கள், அண்மையில் ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.எம். இப்ராஹிம் உட்பட பலரும் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

# ஆளுநரின் பணிப்பில் கிழக்கெங்கும் மரநடுகை !





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாணத்தில் சகல விவசாயப்போதனாசிரியர் பிரிவுகளிலும் நேற்று(30) செவ்வாய்க்கிழமை மரநடுகை இடம் பெற்றது .

அந்த வகையில் காரைதீவு விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில் பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் மரநடுகை இடம் பெற்றது.

தொழில்நுட்ப உதவியாளர் திருமதி வி.நிலக்ஷி பங்குபற்றுதலுடன் மரநடுகை வெற்றிகரமாக இடம் பெற்றது.

# ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக விசேட முத்திரையும் கடித உறையும் வெளியீடு!



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் விசேட நினைவு முத்திரை மற்றும் கடித உறை என்பன நேற்று முன்தினம் (29.05.2023) ஜனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் நினைவு முத்திரையும், கடித உறையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஆறுமுகம் தொண்டமானின் மனைவி ராஜலட்சுமி தொண்டமான் ஆகியோருக்கு நினைவு முத்திரையும், கடித உறையும் வழங்கப்பட்டன.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, கெஹலிய ரம்புக்வெல, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, நஸீர் அஹமட், மனுஷ நாணயக்கார, நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, சீ.பி. ரத்நாயக்க, தபால் மா அதிபர் எஸ். ஆர். டபிள்யூ. எம். ஆர். பி சத்குமார மற்றும் ஆறுமுகம் தொண்டமானின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு
## காரைத்தீவில் சிரமதானம்





டெங்கு ஒழிப்பு சிரமதானம் காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளாகத்தில் நேற்று (30) செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. காரைதீவு முதலாம் ஆறாம் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் சேர்ந்து அப்பகுதி கிராம சபை உத்தியோகத்தர்களான செல்லத்துரை கஜேந்திரன் திருமதி சிறிகாந்தன் தலைமையில் சிரமதானத்தை மேற்கொண்டார்கள்.

காரைதீவு பொலிஸாரும் இணைந்து கொண்டனர்.

வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு ஆரம்பமாகி இருப்பதால் பக்தர்களின் நலன் கருதி ஆலய வளாகத்தில் இச் சிரமதானம் இடம்பெற்றது.

தமிழர் தாயகம் எங்கும்!
வெளிவந்துவிட்டது!
தேசியம் பத்திரிக்கை!

கல்வி,சமூக,அரசியல்
வாரந்த இதழ்
அனைத்து பத்திரிகை
கடைகளிலும் கிடைக்கும்.


அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS



- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.

**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேனி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |









இப்பத்திரிகை அசுரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கன்னாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.